www.agaram.lk

සියලුම හිමිකම් ඇවිරිණි
All Rights Reserved

# வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
# மூன்றாம் தவணைப் பரீட்சை - 2020

தரம் : 10

**விவசாயமும் உணவுத் தொழில் நுட்பமும்- I**

කෘෂි හා ආහාර තාක්ෂණය - I

நேரம்: 1 மணித்தியாலம்

**அறிவுறுத்தல்கள்**

- எல்லா வினாக்களுக்கும் விடை தருக.
- உமக்குத் தரப்பட்ட பல்தேர்வு விடைப்பத்திரத்தில் ஒவ்வொரு வினாவிற்கும் தரப்பட்டுள்ள நான்கு விடைகளினுள் மிகப் பொருத்தமான விடையினைத் தெரிவு செய்து புள்ளடியினை (X) இடுக

1. கலாவாவியிலிருந்து திசாவாவிக்கு நீரைக் கொண்டுசெல்ல யோதஎல கால்வாயை (ஜயகங்கை) நிருமாணித்த அரசன் யார்?
   1) மகாசேன மன்னன் 2) தாதுசேன மன்னன்
   3) துட்டகைமுனு மன்னன் 4) பராக்கிரம பாகு மன்னன்

2. ஆயிரம் வயல்கள் காணப்பட்டதால் "வெல்லஸ்ஸ" என அழைக்கப்படட மாகாணம்,
   1) ஊவா மாகாணம் 2) வடமேல் மாகாணம்
   3) தென் மாகாணம் 4) சப்பிரகமுவ மாகாணம்

3. போர்த்துக் கேயர் மற்றும் ஒல்லாந்தர் அறிமுகஞ் செய்த அவர்களது நாடடுப் பயிர்களாவன,
   1) தென்னை, மிளகாய், றம்புட்டான் 2) அன்னாசி, பப்பாசி, றம்புட்டான்
   3) ஈரப்பலா, தென்னை, நெல் 4) நெல், மெனேரி, அன்னாசி

4. இலங்கையில் விவசாயத்திற்க உகப்பான சூழல் நிலைமைகள் காணப்படல் முக்கியத்துவம் வாய்ந்தது. சரியான சூழ் நிலைமைத் தொகுதிகளாவன.
   1) மண், மழைவீழ்ச்சி 2) மழைவீழ்ச்சியும் நீரும்
   3) மழை வீழ்ச்சியும் உழைப்பும் 4) மழைவீழ்ச்சியும் தரைத்தோற்றமும்

5. எத்தனையாம் ஆண்டு சகல பயிர்களுக்கும் உரமானியம் வழங்குவது ஆரம்பிக்கப்பட்டது.
   1) 2010 2) 2011 3) 2012 4) 2014

6. பசுமைப் புரட்சிக் காரணமாக விவசாயத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் தொடர்பான மூன்று கூற்றுக்கள் கீழே தரப்படடுள்ளன
   A - திருந்திய பயிர்ப்பேதங்கள் அறிமுகஞ்செய்யப்பட்டமையும் விவசாய உற்பத்திகளின் விளைச்சல் அதிகரித்தலும்
   B - நாம் வளர்ப்போம் நாட்டை வளப்படுத்துவோம் செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்படல்
   C - விவசாய இரசாயனங்கள் அறிமுகப்படுத்தலும் அவற்றின் பயன்பாடு அதிகரித்தலும்
   இக்கூற்றுக்ளில் உண்மையானவை
   1) A,B 2) B,C 3) A,C 4) A,B,C

7. குறித்தவொரு பிரதேசமொன்றில் குறுகிய காலப்பகுதியில் வளிமண்டலத்தில் நிலவும் தன்மையானது
   1) கால நிலை 2) சாரீரப்பதன்
   3) ஒளி 4) வானிலை

8. சிறுபோக அறுவடை செய்யும் மாதமானது,
   1) ஜனவரி 2) பெப்ரவரி 3) ஆகஸ்ட் 4) செப்டெம்பர்

இவ் வினாப்பத்திரம் சகல சுகாதார பாதுகாப்பு நடைமுறைகளை பின்பற்றி சுகாதார அமைச்சின் வழிகாட்டல்களின் படி அச்சிட்டு, பொதி செய்செய்யப்பட்டு விநியோகிக்கப் பட்டது



Agaram.lk - Keep your dreams alive!
Agaram.lk - Keep your dreams alive!
agaram.lk

9. வடகிழக்கு பருவப்பெயர்ச்சிக் காற்றின் மூலம் மழைவீழ்ச்சி எதிர்பார்க்கும் மாதங்களாவன.
   1) மே முதல் செப்டம்பர் மாதம் வரை
   2) நவம்பர் முதல் செப்டம்பர் மாதரம் வரை
   3) மார்ச் முதல் ஏப்பிரல் மாதம் வரை
   4) ஒக்டோபர் முதல் நவம்பர் மாதம் வரை

10) ஒளியின் வெவ்வேறு நிறங்கள் தாவரங்களின் வெவ்வேறு வளர்ச்சிப் பருவங்களுக்கு அவசியமாகும். சிவப்பு நிற ஒளி தேவைப்படுவது,
   1) வித்து முளைத்தல் மற்றும் கிளைகொள்ளல்
   2) ஒளித் தொகுப்பிற்காக
   3) கணுவிடை மற்றும் வித்திலை மேற்றண்டு வளர்ச்சிக்கு
   4) பூத்தல், காய் உண்டாதல் என்பவற்றக்கு

11) விஞ்ஞான ரீதியான வகைப்படுத்தலின் படி அரிக்கேசியே குடும்பத்தற்குரிய பயிரானது,
   1) மா  2) இஞ்சி  3) இறப்பர்  4) தென்னை

12. கம்பர் வித்தியாலயத்தின் 10 ஆம் தர மாணவர்கள் பாடசாலை வீட்டுத்தோட்ட நடுகைக்காக சேகரித்த விதைகள் பின்வரும் வகையில் உறைகளில் இடப்பட்டிருந்தது.

| A | B | C | D |
|---|---|---|---|
| முள்ளங்கி | கத்திரி | பாகல் | சிறகவரை |
| கரட் | மிளகாய் | புடோல் | புசிட்டா போஞ்சி |
| கோவா | தக்காளி | வெள்ளரி | பயற்றை |

   இவற்றில் அவுலக்கபோரா பூச்சியின் தாக்கத்திற்குள்ளாகும் கூட்டம்.
   1) A  2) B  3) C  4) D

13. மேலே அட்டவணையில காட்டப்பட்டவற்றில உணவு வேளைக்கு புரதத்தை தரக்கூடிய கூட்டமானது?
   1) A  2) B  3) C  4) D

14. தாவரங்களில் பூத்தல் நடைபெறுவதில் ஒளிக்கால அளவு தாக்கம் செலுத்தும். பின்வருவதில் குறும் பாகற் தாவரக் கூட்டமானது
   1) பீட், கரட், முள்ளங்கி  2) கரும்பு, கோப்பி, பயறு
   3) தென்னை, மிளகாய், கௌபி  4) முள்ளங்கி, கோப்பி, மிளகாய்

15. கடல் மட்டத்தலிருந்து 900 m ஐ விட குத்துயரம் அதிகமுள்ள கால நிலைவலயம் உரித்தாவது,
   1) மேல் நாட்டுவலயம்  2) மத்திய நாடடு வலயம்
   3) தாழ் நாட்டு வலயம்  4) தாழ்நாட்டு இடை வலயம்

16. WM ஆல் குறிக்கப்படும் விவசாயக் காலநிலை வலயமானது,
   1) மேல் நாட்டு ஈரவலயம்  2) மத்திய நாடடு ஈரவலயம்
   3) தாழ் நாட்டு ஈரவலயம்  4) மத்திய நாட்டு இடை வலயம்

17. தீப்பாறையாகக் கருதப்படுவது
   1) குவாட்ஸ்  2) சுண்ணாம்புக்கல்  3) ஷேல்  4) மணற்கல்

18. தாவரங்களால் அகத்துறிஞ்சக்கூடிய மண்ணில் காணப்படும் மண்ணீர்வகையானது?
   1) புவியீர்ப்பு நீர்  2) மயிர்த்துளை நீர்  3) பருகு நீர்  4) ஊற்று நீர்

19. மண்ணின் இரசாய இயல்பொன்றானது,
   1) மண் கட்டமைப்பு  2) மண் ஆழம்
   3) மண் தாக்கங்கள்  4) மண்ணிறம்

20. மண் மாதிரி ஒன்றின் pH பெறுமானம் 5.4 ஆகுமாயின் அம்மண்ணானது?
   1) கடும் அமில மண்  2) கடுங்கார மண்  3) அமில மண்  4) கார மண்



agaram.lk
Agaram.lk - Keep your dreams alive!
Agaram.lk - Keep your dreams alive!

Agaram.lk - Keep your dreams alive!

21. தாவரங்களின் வளர்ச்சிக் கோலத்திற்கேற்ப பயிர்களை செடிகள், புதர்கள், மரங்கள் என வகைப்படுத்தப்படும் மேலுள்ள வகைப்படுத்தல் ஒழுங்கை முறையே குறப்பிடும் விடையானது,
    1) வெண்டி, றம்புட்டான், தென்னை
    2) வெண்டி, மாதுளை, றம்புட்டான்
    3) கோப்பி, அன்னாசி, றம்புட்டான்
    4) மாதுளை, றம்புட்டான், மிளகாய்

22. பயிர்வளர்ச்சிக்கு பொருத்தமான மண்ணில் காணப்பட வேண்டிய மண் கூறுகளின் நூற்று வீதத்தை சரியாகக் குறிப்பிடுவது எது?
    1) நீர் 25 % , வளி 25 % , கணிப்பொருள் 40 % , சேதனப்பதார்த்தம் 10 %
    2) நீர் 30 % , வளி 20 % , கணிப்பொருள் 25 % , சேதனப்பதார்த்தம் 25 %
    3) நீர் 25 % , வளி 25 % , கணிப்பொருள் 45 % , சேதனப்பதார்த்தம் 5 %
    4) நீர் 20 % , வளி 25 % , கணிப்பொருள் 45 % , சேதனப்பதார்த்தம் 10 %

23. மல்வாசே குடும்பப் பயிரான வெண்டிக்காய் செய்கையில் பொறிப் பயிராக பயன்படுத்தப்படுவது எவ்வகையான பூச்சியை கட்டுப்படுத்துவதற்கு?
    1) குக்கர்பிற்றே ஈ
    2) செம்பருத்தி மூட்டுப்பூச்சி
    3) நெல் மூட்டைப் பூச்சி
    4) பழ ஈ

24. பயிரச் செய்கைக்காக நிலப் பண்படுத்தல் தொடர்பான கூற்றுக்களில் பிழையான கூற்று எது?
    1) நிலம் பண்படுத்தலால் பயிர்வளர்ச்சிக்கு சாதகமான மண் நிலைமைகள் வழங்கப்படும்.
    2) சரியான நிலப் பண்படுத்தலால் களைகள் கட்டுப்படுத்தப்படும்
    3) இடைப் பண்படுத்தல் மேற்கொள்ளப்படுவது பயர் தாபிக்கப்பட முன்னராகும்.
    4) நிலப் பண்படுத்தலால் மண்ணின் நீர்ப் பற்றும் தன்மை அதிகரிக்கும்.


25. தென்னைச் செய்கையில் நடுகை குழிகளுக்கிடையிலான தூரமானது
    1) 6 x6 m
    2) 8 x 8 m
    3) 10 x 10 m
    4) 12 x 12 m

26. சூழல் கலப்பை என அழைக்கப்படுவது
    1) முட்கலப்பை
    2) நாட்டுக் கலப்பை
    3) ஜப்பானிய சூழல் களைகட்டும் கருவி
    4) வட்டத் தட்டுக் கலப்பை

27. நாற்றுக்களின் சீரான வளர்ச்சிகாக நாற்று மேடைகளில் நாற்று மேடை ஊடகக்கலவை இடப்படும் இந்நாற்று மேடை ஊடகக்கலவை தயாரிப்பில் மேல் மண், சேதனப் பசளை என்பனவற்றின் விகிதமானது,
    1) 1 : 1
    2) 1 : 2
    3) 1 : 3
    4) 2 : 1

28. சர்வதேச மண்ணியல் சங்கத்தின் வகைப்படுத்தலுக்கமைய 2 mm ஐ விட பெரிய துணிக்கையானது,
    1) அடையலாகும்
    2) களியாகும்
    3) பரல்லாகும்
    4) மென்மணலாகும்

29. பக்கத்தில் காட்டப்பட்டுள்ள நீர வடிப்பு வடிகாற் தொகுதியானது
    1) உப வடிகால்
    2) ஹெறிங்கின் மீன்முள் வடிகாற்றொகுதி
    3) சமாந்தர வடிகால்
    4) கல்வடிகால்




30. நெற் செய்கையில் மேற்கட்டும் பசளையாக பயன்படுத்தப்படும் TDM பசளையில் அடங்கும் மூலகங்களாவன
    1) நைதரசன் - பொசுபரசு
    2) நைதரசன் - பொற்றாசியம்
    3) நைதரசன் - காபன்
    4) நைதரசன் - கல்சியம்

31. பயிர்ச் செய்கையில் மும்பை சுப்பர் பொசுபேற்று (TSP) பசளை பரவலாக பயன்படுத்தப்படுகின்றது. இப்பசளைவகையல் அடஙகியுள்ள பொசுபரசு ($P_2O_2$) விகிதமானது,
    1) 20 %
    2) 27 %
    3) 45 %
    4) 60 %

32. பல்லாண்டு களைகள் மாத்திரம் அடங்கிய கூட்டமானது
    1) குப்பை மேனி, கோரை, மயிலக் கொண்டை
    2) ஆனையறுகு, நீர் சேம்பு, கோரை
    3) கந்தபான, கோரை, குப்பை மேனி
    4) தொட்டாற் சுருங்கி, துத்திர, சீதேவியார் செங்கழுநீர்



agaram.lk

Agaram.lk - Keep your dreams alive!

33. கூட்டெரு தயாரிப்பில் மூலப்பொருளாக பயன்படுத்துவதால் காரத் தன்மை ஏற்பட்டு மூலப்பொருட்கடகள் சிதைவடைதல் தாமதமாவதுடன் கூட்டெருவிலடங்கும் நைதரச சதவீதம் குறைவடையும். இம்மூலப் பொருளானது,
 1) நீர்த் தாவரங்களும் புல் வகையும்
 2) வைக்கோலும், சாணமும்
 3) விறகுச் சாம்பலும், சுண்ணாம்பும்
 4) கோழியெரு, அவரையினத் தாவர இலைகள்

34. மிளகாய், போஞ்சி பயிர்களில் பின்வரும் அறிகுறிகள் காணப்பட்டன.
 இலைகளில் ஒழுங்கின்றிய மஞ்சள், கபில, கருங்கபில அல்லது கறுப்புநிறப் புள்ளிகள் தோன்றல்
 கறுப்புப் புள்ளிகள் தோன்றிய பின்னர் பெருத்து கறுங்கபில நிறமாக மாறுதல்
 1) கொத்துமுளை 2) அடியழுகள்
 3) அந்துரொக்னோஸ் 4) சித்திர வடிவ நோய்

35. தாவர நுண்ணங்கிகளாக கருதக்கூடியவை
 1) தாவர வேரும் ஹெமடோடாக்கள்
 2) அல்காவும் பற்றீரியாவும்
 3) வண்டுகளும் பற்றீரியாவும்
 4) எறும்புகளும், மண்புழுவும்

36. கதிர்த் தொடக்க வடிவம் உருவானதிலிருந்து பூ உருவாகும் வரையான காலம் நெற்பயிரின் இனப்பெருக்க அவத்தையாகும். இக்காலமானது
 1) 20 நாட்கள் 2) 25 நாட்கள் 3) 30 நாட்கள் 4) 35 நாட்கள்

37. திருத்திய நெற்பேதங்களுடன் ஒப்பிடும் போது இலங்கையின் பாரம்பரிய நெல்வர்க்கங்கள் பற்றிய சரியான கூற்றானது.
 1) உயர் விளைச்சல் கொண்டது 2) பாட்டத்தில் சாயாயது
 3) பசளை தூண்டற்பேறைக் கொண்டது 4) நுகர்வதால் ஆரோக்கியம் ஏற்படும்

38. அதிக மழையின் பின்னர் சாய்வான பூமியில் அடித்ததுச் செல்லும் நீருடன் மண்துணிக்கைகள் எடுத்துச் செல்வதை இழிவாக்க பொருத்தமான செயல்முறையானது,
 1) மண்ணிற்கு மூடுபடை இடுதல் 2) களைகளை அகற்றுதல்
 3) மண்ணிற்கு சேதனப் பதார்த்தங்கள் சேர்த்தல் 4) சமவுயரக் கோட்டு வடிகாலமைத்தல்

39. A,B,C,D ஆகிய விதை நெல் மாதிரிகள் நான்கு பற்றிய தகவல்கள் கீழுள்ள அட்டவணையில காட்டப்பட்டுள்ளது.

| நெல் மாதிரி | முளைதிறள் | ஈரலிப்பு | விதைத்தூய்மை |
|---|---|---|---|
| A | 85 % | 13 % | 98 % |
| B | 70 % | 18 % | 90 % |
| C | 80 % | 20 % | 85 % |
| D | 90 % | 16 % | 95 % |

 இவற்றில் விதை நெல்லாக பயன்படுத்த மிகப் பொருத்தமான நெல் மாதரியானது,
 1) A 2) B 3) C 4) D

40. கபில நிற சத்துக்குத்தியை கட்டுப்படுத்துவதற்காக எதிர்ப்பின பேதமாக அறிமுகப்படுத்தப்பட்ட $B\ 35_2$ நெற்பேததை அறிமுகப்படுத்திய ஆராய்ச்சி நிலையம் எது?
 1) கன்னொருவை 2) மகா இலுப்பளம்
 3) பத்தல கொ 4) ஹிக்குரக்கொட

இவ் வினாப்பத்திரம் சகல சுகாதார பாதுகாப்பு நடைமுறைகளை பின்பற்றி சுகாதார அமைச்சின் வழிகாட்டல்களின் படி அச்சிட்டு, பொதி செய்செய்யப்பட்டு விநியோகிக்கப் பட்டது



agaram.lk

